Registered as a News
Paper in Ceylon
P M G No. H A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ
( 1889 )
ஆவணி மாதம்
28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரவரு ஆவணிமீ உ௬ உ செவ்வாய்க்கிழமை (11 செப்டெம்பர் 1951) [இல.-௬௩]

## நல்லூர், ஸ்ரீ. கணேச வித்தியா விருத்திச் சங்கம்

இச் சங்கத்தின் 18-ம் ஆண்டுப் பொதுக் கூட்டம் சென்ற சனிக்கிழமை பிற்பகல், ஷை சங்க மண்டபத்தில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. த. முத்துச்சுவாமிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது. குறித்த சங்கம், சமய விஷயமாகவும், பிள்ளைகளுக்குச் சமய அறிவை ஊட்டும் விஷயமாகவும், அவைத் தலைவர் பாராட்டிப் பேசினர். அதன் பின், நியாயதுரந்தரர் திரு. மு. பாலசுந்தரம் பேசும்போது இக் காலத்தில் இலவசக் கல்வி என்று சொல்லிக்கொண்டு, படிக்கும் பிள்ளைகளிடத்தில் கல்வி அதிகாரிகள் பலவாற்றும் பணமறவிடுவதைக் கண்டித்துப் பேசினர்; அதன் பின் திரு. க. கனகரத்தினம் பேசும்போது சமயத் தொண்டிலே மகளிரே பெரிதும் ஈடுபடவேண்டுமென்னும் கருத்துப்படப் பேசினர். பின்னர் முதலியார் S. சின்னத்தம்பி சைவமக்களாயுள்ளார் தங்கள் சமயத்தை அநுட்டிக்கும் விஷயத்தில் வேண்டியதிருத்தங்கள் செய்யாதொழியின் புராதனமான இந்த சமயத்தை இழக்க வேண்டி நேருமென்று எச்சரித்தனர். —கடித.

## சனசமூக சேவா சங்கம்

நல்லூர் வடக்கு சனசமூக சேவா சங்கத்தின் 2-வது ஆண்டுக் கூட்டம் சென்ற வெள்ளிக் கிழமை மாலை ஆறரை மணிவரையில் மேற்படியூர் ஸ்ரீகணேச வித்தியாவிருத்திச் சங்க மண்டபத்தில், மந்திரி க. சிற்றம்பலத்தின் தலைமையில் நடைபெற்றது. தலைவர் நல்லூரிலுள்ள உபதபாற்கந்தோர் ஸ்தானத்தை கன்னிலைப்படுத்த வதற்குத் தம்மாலியன செய்வதாக வாக்களித்தனர். பாராளுமன்ற அங்கத்தவராகிய திரு. கு. வன்னியசிங்கம் பேசும்போது வட இலங்கையிலுள்ள மக்களின் விருத்தியை உத்தேசித்து உழைக்க வேண்டுமென்று கூறினர். திருவாளர்கள் D.W. செல்வரத்தினம், E.P. இராசையா, S. பஞ்சோதி, K. செல்லையா என்னுமிவர்களும் பேசினார்கள். —கடித.

## விசுவலிங்க மகாகணபதி கோவிற் பரிபாலனசபைக்கூட்டம்

வண்ணார்பண்ணை விசுவலிங்க மகாகணபதி (பண்றிக் கோட்டுப் பிள்ளையார்) கோவில் தருமபரிபாலன சபைக்கூட்டம் வருகிற புதன்கிழமை (12-9-51) பகல் 8 மணிவரையில் மேற்படி கோவில் மண்டபத்திற் கூடப்படுமெனக் குறித்த சபைக் காரியதரிசியாகிய திரு. S. K. பாலசுப்பிரமணியக் தெரிவிக்கின்றார்.

உ

## தோத்திரம்

திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

காய்ந்தாய் அனங்க னுடலம் பொடிபடக் காலனைமுன்
பாய்ந்தா யுயிர்செகப் பாதம் பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்தாய்ந் தறுப்பாய் அடியேற் கருளாயுன் னன்பர்சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்திமுற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

—அப்பர் சுவாமிகள்.

[திருச்சத்தி முற்றமென்னுந்தலத்திற் கோயில்கொண்டருளிய சிவக்கொழுந்தே! மன்மதனுடைய தேகஞ் சாம்பராம்படி எரித்தருளினீர்; முற்காலத்தில் (மார்க்கண்டேயர் பொருட்டு) யமனை உயிர் நீங்கும்படி உதைத்தருளினீர்; தேவரீருடைய திருவடிகளை வணங்குகின்றவர்களுக்கு அவர்கள் செய்யும் நல்வினை தீவினைகளை யாராய்ந்து அவற்றிற்கேற்ப அருள்புரிந்து அவர்கள் பாசத்தைநயொழித்தருளுவீர்; மெய்யடியாரது உள்ளத்துள் இருப்பீர்; (ஆதலால்) தமியேனுக்கு அருள் புரிகின்றிலீர் என்பதுசொற்பொருள். அனங்கன்-மன்மதன; அங்கமில்லாதவன்] (2)

# வேதம் எழுதாமறை

வேதம் எழுதாமறை எனப்படுதலை,

"எனை நிலமும் எழுதா
மறையீறுங்
கோனெடு தன்னையுங் காணுங்
குணத்தரே"

என்னுந் திருமந்திரத்தாலும், "எழுதாதமறை யளித்த எழுத்தறியும் பெருமானை" என்னும் பெரிய புராணத்தாலும் அறியலாம்.

மேலும், அருண்மொழித் தேவர் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில, "வண்டமிழால் எழுதுமறை மொழிந்தபிரான் திருப்புகலி மருங்கு சார்ந்தார்" என்றருளுவர்.

இதற்கு சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் எழுதிய குறிப்பு:—

"இறைவன் திருவாக்காகிய வேதங்கள் என்னும் எழுதாமறைகளின் பொருள்களை எழுதும் மறையாகத் தமிழால் அருளியவர். நான்மறை எனப்படுவன தமிழிலே முன் இருந்தன என்பது புதிய கொள்கை. அஃது ஆசிரியர் முதலிய முனைவோர் கருத்தன்றென்பது" என்பதாம. இவ்வுண்மையைச் சேக்கிழார் புராணத் திருவிருத்தம் முதலியவற்றானும் விளக்கினும். ஆண்டுக் காண்க.

இன்னும் மாணிக்கவாசக சுவாமிகள் சரிதம் கூறும் திருவாதவூரடிகள் புராணத்தில், "செந்தமிழில் வந்தசிவஞானவமுதுண்டாம், அந்தமிலருட்கடலை ஆண்டருளவேண்டி" எனச் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு ஸ்ரீமத் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, "தம்பினின்றும் ஆரியமொழி வடிவில் வெளிவந்த சிவஞானமாகிய அமுதம் அத்தியற்புத அதிமதுரச் சுத்தச் செந்தமிழ் மொழிவடிவில் உண்டாகப்பெறும் களையற்ற திருபா சமுத்திரமாகிய திருவாதவூரடிகளை அடிமைக்கொண்டருளத் திருவுளங்கொண்டு என எழுதிய பதவுரையும், "தமமால ஆரியமொழி வடிவில் வெளிவந்த சிவஞானம் என்றது, வேதத்தின் ஞானகாண்டத்தை" என எழுதிய விசேடவுரையுங் காண்க.

மேலும் திருவாதவூரடிகளைச் "சுருதிசெந்தமிழாக்கிய மொழியார்" எனவும், "பரம்பரப்பொருளாயிந்தப் பைந்தமிழோதி வையம் — இருடும்பிறப்பகலவந்து பிறந்தவர்" எனவும், கூறுவர் கடவுண்மாமுனிவர். இவற்றிற்கு முறையே "வடமொழி வேதத்தைத் தென்மொழி வேதமாக்கும் மாணிக்கவாசக சுவாமிகள்" எனவும், "உலகமானது முதனூல்களாகிய வேதசிவாகமங்களின பாரம்பரியப் பொருளையுடைய இத்திருவாசகத்தைப் பாராயணஞ் செய்து அநாதியாயுள்ள பிறவி நீங்க வந்து திருவவதாரஞ்செய்த சென்மசாபல்யராகிய திருவாதவூரடிகளது இவ்வத்தியற்புத சமாசாரங்களையெல்லாம்" என ஸ்ரீமத். ம. க. வேற்பிள்ளை ஆசிரியர் மெய்யுரை கண்டனர். இவற்றைச் சமதிருஷ்டி கொண்டு நோக்குவார்க்குத் தமிழ் வேதமாகிய திருவாசகமும், வடமொழி வேதசாரமேயாமென்பது நன்கு புலப்படும்.

இங்ஙனம் சேக்கிழார் சுவாமிகளும் உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் கடவுண்மா முனிவரும் அவ்வாறே அருணகிரி நாதரும் கூறினமையானன்றே, ஆறுமுக நாவலரும், வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் உளளபடி அறிவிக்கும் தமிழ்நூல்கள் தேவாரம் திருவாசகம் என்னும் இரண்டுமாம்" என அறிவுறுத்தினார் என்றறிக.

இவ்வா றிருத்தலினால், வேதங்களும் ஆகமங்களுமே முதனூல்கள் என்பதும், தேவார திருவாசகங்கள் அவற்றின் சாரமாக உதித்தன என்பதும், அவைகளே தமிழ்மறைகள் என்பதும் அசைக்க முடியாதவாறு நாட்டப்பெற்றமை காண்க.

— வேதாகம நிருபணம்
இரண்டாம் பாகம்.

## திருக்கேதீச்சரம்

## புதை பொருள் காணப்பட்டன

திருக்கேதீச்சரத்தில் திருமஞ்சனக் கிணறு தோண்டும்போது 22 அடியாழத்தில் மண்ணால் செய்யப்பெற்ற ஒரு கலசமும், அதன்கீழ் ஒரு பெரிய பிடாவும் எவ்வகையான சிதைவுமின்றிப் புதியனபோற் கண்டெடுக்கப்பட்டனவெனவும், 22 அடி ஆழத்திற்குத் தோண்டியும் இன்னும் ஊற்றுக் காணப்படாமையால் மேலும் தோண்டப்படுகிறதெனவும், மேற்படி கோயிற் பூசகராகிய பிரமஸ்ரீ இத்திரக்குருக்கள் தெரிவிக்கின்றார்.

நடேசரபிடேகம்

இத்தலத்தின்கண் சில மாசங்கட்கு முன் நவமாகப் பிரதிஷ்டை செய்யப்பெற்ற சிவகாமசுந்தரியம்மை சமேத நடராச மூர்த்திக்கு, அபிடேகத் தினங்கள் ஆறனுளொன்றாகிய வருகிற வெள்ளிக் கிழமை (14—9—51) பகல் விசேட அபிடேகமும் ஆராதனையும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## காதற் கடிதங் காரணமாக நேர்ந்த தற்கொலை

காலியைச் சேர்ந்த ஊட்டிலக்கொடா என்னுங் கிராமத்தில் வசித்த சுமணவதி யென்னுங் கன்னிகை ஒரு கடிதத்தை வைத்து வாசிக்கும்போது, அக் கடிதத்திற் சந்தேகங் கொண்டு அவளுடைய தமையனாகிய சாளி யென்பவன் அக் கடிதத்தைத் தான் படிக்கத் தரும்படி கேட்க, அவள் கொடுக்க மறுக்க, அவன் அவள் கையிலிருந்து கடிதத்தைப் பலாத்காரமாகப் பறித்துப் படித்தவிடத்தில் அது காதற் கடிதமெனக் கண்டு, தங்கையைச் சினந்து தங்கள் வீட்டைவிட்டு உடனே போகும்படி சொன்னான், இதனாற் சுமணவதி மன வைராக்கியங் கொண்டாளாய்த் தங்கள் வீட்டிலுள்ள ஒரு வளையிற் கயிற்றை மாட்டிக் கழுத்திற் சுருக்கிட்டுத் தூங்கித் தற்கொலை செய்துவிட்டாளாம்.

## சோரமாக இந்நாட்டிற் புகுந்தோர் தொகை 2119

சென்ற ஜனவரி தொடக்கம் யூலாய் மாசம் முடியவுள்ள ஆறுமாச காலத்திலே இந்நாட்டுட் சோரமாக வந்து இறங்கிய இந்தியரின் தொகை 2119; அனல் இவர்களுள் 140 பேர் சோரமாகப் புகுந்தனரென ருசுப்படுத்த முடியாமையினால் விடுவிக்க செய்யப்பட்டனர்; ஏனையோர் விளக்க மறியலிருக்கின்றனராம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ், கரஞு ஆவணி மீ உசு உ செவ்வாய்க்கிழமை

## மழை பெய்யுமா?

"மழையின்றி மாநிலத்தார்க்கில்லை, மழையும் இல்வாழ்வார் இல்வழியில்" என்பது பெரியோர் வாக்கு; மழை பெய்யாதொழியுமானல் இந்தப் பெரிய உலகத்திலே வசிக்கும் மக்களுக்கு எவ்வகையான நன்மையுமில்லையாம்; எனவேமழைகாலந் தவருது பெய்தாற்ருன் மக்கள் இனிது வாழ்தல் முடியுமென்பது பெறப்படும்; இப்படியான இன்றியமையா மழையும் இல்வாழ்வார் இல்லையாயின் பெய்யா தொழியுமாம். இதனுல் உலகத்திலே மக்கள் இனிது வாழ்தற்கு மழை வேண்டும், மழை காலந்தவருது பெய்தற்கு இல்வாழ்வார் வேண்டுமென்பது புலனுகின்றது; உலகத்திலேயுள்ள மக்களுள் இல்வாழ்க்கையின் பாற்பட்டவர்கள் தாமே கூடிய தொகையினர்; இப்படியிருக்க மழைபெய்வதற்கு இல்வாழ்வார் வேண்டு மென்பது மிகையெனின், அற்றன்று;

ஒரு பெண்ணைக் கல்யாணஞ் செய்து பிள்ளைகளைப் பெற்று மனைவி மக்களோடு நன்கு உண்டுடுத்தேனும், தரித்திரதோடேனும் வசித்தால், அது மாத்திரம் இல்வாழ்க்கையாய் விடுமென்றெண்ணிக்கொள்ளவொண்ணுது; முறைப்படி வாழ்தலே வாழ்க்கையாகும்; அஃதல்லாதவெல்லாம் வசித்தல், சஞ்சரித்தல், சீவித்தல், காலங்கழித்தல் என்ற சொற்களாற் குறிக்கப்படும். தனக்கு விதிக்கப்பட்ட ஒழுக்கங்கள் தானதருமங்கள் முதலியவற்றைச் செய்துகொண்டு, கற்பிற்சிறந்த பெண்ணை மனைவியாகக் கொண்டு தெய்வ பக்தியோடு வாழ்பவனே இல்வாழ்வானுவான்; அவன் நடத்தும் வாழ்க்கையே இல்வாழ்க்கையாகும்; இப்படியான வாழ்க்கையை நடத்தும் மக்கள் ஊரிலிருப்பரேல், மழை பெய்யாமல் விட முடியாதெனலாம். ஏனைய மூன்று ஆசிரமத்தினருள் எவரையேனும எடுத்துச் சொல்லாது, இல்வாழ்வான் மாத்திரம மழைக்குக் காரணனென எடுத்துச் சொன்னமைக்கு ஏது என்னையெனின், இல்வாழ்வானே தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல், பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசியென்னுமிவர்களெல்லார்க்குங் கடன் செய்ய வேண்டியவனுகிருன்; இவைகள் மாத்திரமல்லாமல், மாடு ஆடு முதலாம் மிருகங்களையும் பாதுகாப்பவனும் இல்வாழ்வானேயாவன். இவற்றை யாராயுமிடத்து இல்வாழ்வார் தம் நிலையிலே திறம்பினுற் காலமழை பெய்யா தென்பது உணரக் கிடக்கின்றது.

இனி, அந்தணர் அரசர் கற்புடை மகளிர் மழைக்குக் காரணரன்ருே வெனின், இந்த மூவரும் அந்த இல்வாழ்வாருள் அடங்குவ ரென்ப தமையும்; இவற்றையெல்லாம் இப்பொழுது எடுத்துக் காட்டுவது எதற்கெனின், இந்நாட்டிலே மழை குன்றத் தலைப்பட்டது; காலமழை பெய்யாதொழிந்தது; சென்ற பங்குனி மாசத்தில் மழை பெய்தபின், ஐந்துமாச காலமாக இற்றை வரையிற் பெருமழை பெய்திலது; இதனுல், ஏரி, குளம், மடு, துரவு, கிணறு முதலிய நீர் நிலைகளிலெல்லாம் தண்ணீரில்லாதொழிந்தது; ஊர்காவற்றுறை முதலிய சில ஊர்களில் வசிக்கும் மக்கள், குளிப்பதற்கல்ல, சமையல் செய்வதற்குங் குடிப்பதற்குந் தண்ணீரில்லாது தவிக்கின்றனர்; மாடுகள் ஆடுகள் பல புல்லின்மையாலும் தண்ணீரகப்படாமையாலும் மாளுகின்றன; இங்கு நெல் விதைத்தற் காலமாகிய ஆவணி மாசம் முடிபப்போகின்றதெனினும், மழையில்லாமையாற் பலவூர்களில் வயல்கள் உழுது பண்படுத்தப் படாமற் கிடக்கின்றன; விதை மழை பெய்ய வேண்டிய இந்த மாசத்திலே தாங்கொணு வெயி லெறிக்கின்றது; இரவிற் குளிரோடு கூடிய காற்று வீசுகின்றது. "ஐயோ! மழையில்லையே!" என்று இங்குள்ள மக்கள் அழுது வருந்துகிருர்கள். ஏன் மழை பெய்யவில்லையென்பது தான் கேள்வி. இந்தக் காலத்தில் மழை பெய்வது முறையோ? பெய்யாதொழிதல் முறையோ? என்பது சிந்திக்கத் தக்கது.

மழைக்குக் காரணரென்று சொல்லப்படும் அந்தணரென்போருட் சிலரொழியப் பலர், தாம் செய்யும் பரார்த்த பூசையைத்தானும் பத்தி விநயமின்றி வியாபாரார்த்தமாகச் செய்யத் தலைப்பட்டால் மழைபெய்யுமா? அரசினரெனப்படுவோர் தம் பரிபாலனம் சுதந்திரத்தோடு கூடியதென்று சொல்லிக் கொண்டு, அதற்கு மாருகக் கட்சிகளாகப் பிரிந்து கூடிய தொகை மக்களைக்கொண்ட கட்சியினர் குறைந்த தொகைக் கட்சியினரையும், கூடிய தொகையுடைய சாதியார் தொகையிற் குறைந்த சாதியினரையும அடக்கி நெருக்கியும், புறக்கணித்தும், அடிமைப்படுத்தியும் ஆளநோக்கங் கொண்டால் மழை பெய்யுமா? நாட்டிலுள்ள பெண்பாலாருட் சிலரினுஞ் சிலரொழிய, ஏனையோர் தங்கள் புராதன ஒழுக்கங்களைக் கைவிட்டு விபரீதம் பூண்டு நடக்கத் தொடங்கினுல் மழை பெய்யுமா? வேத நிந்தனை, சிவாகம நிந்தனை, புராணேதிகாச நிந்தனை, ஏனைய சாத்திர நிந்தனை, பெரியோர் நிந்தனை அதிகப்பட்டால் மழைபெய்ய இடமுண்டா? ஆலயங்கள் கிலமுற்றுக் கிடக்க அவற்றிற்குரியார் அயலார் மங்கல கருமஞ் செய்தால் மழை பெய்யுமா? சமயஞ், சாதி, தேசம், பாஷை யென்னுமிவற்றைப் பாதுகாத்து வளர்க்கும்பொருட்டு எழுந்த சபைகள் சங்கங்களிற் கட்சி பேதமும் பிணக்கும் பரஸ்பரம் விரோதமும், கொண்ட கொள்கைக்கு மாருன செயல்களும் நேருமானுல் மழை பெய்யுமா? மதுபானம் கொலை கட் காமம் முதலிய குற்றங்கள் நாட்டில் அதிகப்படுமானுல் மழை பெய்யுமா?

தீமைகள் இவ்வளவில் நின்றுவிடவில்லை; தனது மைந்தன் செலுத்திய தேரின் சில்லில் அகப்பட்டு மாண்ட பசுக்கன்றின்பொருட்டுத்தன்ஒரேயொரு மகனை அத் தேர்க்காலில் இட்டு நெரித்துக் கொல்லத் துணிந்த மனுநீதிகண்டசோழனுற் பரிபாலிக்கப்பெற்று மூதாதைகளாகிய தமிழ்ச் சைவ மக்களின் வழித் தோன்றல்களாக வுள்ள இந்நாட்டு மக்கள், பறங்கியர் உணவின் பொருட்டு மாடு ஒன்று தரும்படி பணிக்க, அதற்கிசையாது, தாம் பிறந்த இந்த யாழ்ப்பாணமாகிய நாட்டைவிட்டுச் சிதம்பரஞ் சென்று துறவுபூண்டு அங்கேசிவதொண்டுஞ் சைவசாத்திரங்களுஞ் செய்து கொண்டு வாழ்ந்த ஞானப்பிரகாச முனிவருடைய சந்ததியினராக வுள்ள சைவத் தமிழ் மக்கள் இப்பொழுது செய்யத் தலைப்பட்டுள்ள பாதகச் செயலை நினைக்க மனமும், சொல்ல வாயும், எழுதக் கையுங் கூசுமன்ருே! ஆனுலும் வெளியிடாமல் முடியாது! இங்குள்ள துரோகிகள் சிலர் இக்காலத்திலே தங்கள் பிள்ளைகளைப்போலப் பேணி வளர்த்த எருதுகளையும் மலட்டுப் பசுக்களையும் முதுமையடைந்த பசுக்களையும் பணத்திற்கு ஆசைப்பட்டு நாள்தோறும் நூற்றுக கணக்கானவற்றை இறைச்சியடிக்கும்படி விற்று விடுகிருர்கள்! இவர்களும் பயிரிடுந் தொழில் செய்யும் வேளாளர்களாம்! தாங்கள் சைவர்களென்று சொல்லி, நெற்றியில் விபூதியும் பூசியபடி காணப்படுகிருர்களே! இச் சண்டாளரிருக்கும் நாட்டில், நல்லாரொருவரல்லர் அறுபேரிருந்தாலுங் காலமழை பெய்யுமா?

மழை மனுஷனுடைய முயற்சியினுற் பெய்வதன்று; மழை பெய்தற்குத் தெய்வ வழிபாடும சீலமும் இறைவனருளும் வேண்டும்; அக் காலத்துள்ள பெரியோர்களும் "வீழ்க தண்புனல்" "வான்முகில் வழாது பெய்க" "பொன்மழை பொழிந்து வாழ்க" எனவும ஆண்டவனை வேண்டினர்; "......எங்கோமானன்பர்க்கும், முன்னிய வணமக்கும் முன்சுரக்கு மின்னருளே, என்னப் பொழியாய் மழையேலோரெம்பாவாய்" என்றருளிச் செய்துள்ளார் மாணிக்கவாசக சுவாமிகள்; ஆதலால் இக்காலத்தும் இங்குள்ள மக்கள் மறச் செயலைத் தவிர்த்து அறச் செயலை மாற்றி இறைவனருளை யாசித்து நிற்பரேற் காலமழை பெய்யாதொழியுமா?

# உலகம்பலவிதக்கதை

( முற்றொடர்—20 )

### "அவருக்குந் திருப்தி வராது, என் மனமும் ஆறுதலடையாது"

மேலுஞ் சற்றுநேரம் பேசியபின் கமலாட்சி வனசாவிடத்தும் அவள் தாயிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு, விரைவில் மீண்டு அங்கு வருவதாகச் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குச்சென்ருள்; இவ்வணமாக அதுகாறுந் துயரக் கடலிற் படிந்து கிடந்த வனசாட்சி கமலாவின்சொற் கேட்டபின் ஒருவாறு மனந்தேறினுள்; ஆனுல், "வழிற்பெருவலியா வுள...." என்று கமலா தனக்கு எடுத்துக்காட்டிய குறளைச் சிந்தித்தாள்; தன்னூழ் எப்படியாகுமென்பதை அவள் அறியாளல்லவா? அதனுற் சிறிது தியங்கினுள்; தன் மைத்துனனிடத்தில் உண்மையான விசுவாசம் பூண்டிருந்தமையால், அவனுடைய உள்ளமுந் தன்னையே நாடுமென்று வனசா துணிந்தாள்; அன்றுதொடக்கம் வனசாட்சி "எல்லாம் ஈசன் செயல்" என்ற திடங்கொண்டவளாய்த் தங்கள் குலதெய்வமாகிய பிள்ளையாரை மனத்திலே தியானித்து வீட்டிலிருந்தே வழிபாடு செய்து வருவாளாயினுள்; மகள் கவலைநீங்கி ஒருவாறு சந்தோஷமாயிருப்பதைக்கண்டு தாயும் மகிழ்ச்சியடைந்தாள்; இவ்வாருக ஒருவாரஞ் சென்றபின் கமலாட்சி மீண்டும் வனசாவீட்டிற்கு வர, வனசா அவளைப் பலவாறு உபசரித்திருத்தினுள்; "அக்கா, உங்கள் தமயனுரிடமிருந்து உங்களுக்கு ஏதுங் கடிதங் கிடைத்ததுண்டோ" என்று கூசக்கூசிக் கேட்க "இல்லை, தங்காய், நான் வீடுவந்து சேர்ந்தவுடன் அவருக்குக் கடிதமெழுதினேன்; ஆனுல் அவருடைய பதில் இன்னமுங்கிடைக்கவில்லை; இரண்டொருவேளையிற் கடிதம வருமெனக் காத்திருக்கிறேன்; வந்தவுடன் உம்மிடம வந்து தெரிவிப்பேன்; கவலை வேண்டாம்; ஆனுல் இன்று நான் வேருெரு செய்தி சொல்லிப் போகும்படியாக வந்தேன்" என்ருள் கமலாட்சி. "என்ன செய்தி? அக்கா," என்று ஆவலுடன் வனஜா வினவ, "வேருென்றுமல்ல, தங்காய்,என்னுடைய அவர் வருகிற ஞாயிற்றுக்கிழமை அந்திப் புகைரதத்திற் புறப்பட்டுத் தம்மிடம் வரும்படி கடிதமெழுதியிருக்கிருர்; நான் போகத்தான் வேண்டும்; தங்கைச்சி, நீரும் அப்பத்தானே வேணும்; எவ்வளவு பொருளிருந்தாலும், என்னென்ன சௌகரியமுண்டானுலும், எத்தனை வேலைக்காரர் அங்கே நின்ருலும்,

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## உலகம் பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

நான் அந்த இடத்திலிருந்து ஆக வேண்டிய கருமங்களையும் பார்த்துக் கொண்டு, என்கையால், அவர்குறிப் பறிந்து சமையல் செய்து காலந் தவறாமல் அவருக்கு உணவு நான் பரிமாறினாலல்லாமல், அவருக்குத் திருப்தியாகாது; என்மனமும் ஆறுதலடையாது; இவைகளையெல்லாம் உத்தேசித்தே நான் இன்னும் இங்கே தங்கியிராமல் அவர் கடிதம் கண்டவுடன் அங்கே போய்ச் சேர நிச்சயித்து விட்டேன்" என்று உருக்கத்துடன் சொன்னாள் கமலாட்சி; கேட்ட வனசா "அக்கா, நீங்கள் சொல்வது முழுவதுஞ் சரி, ஆனால்...." என்று சொல்வதற்கிடையில் "ஆனால், என்ன தங்கைச்சி" என்று ஆவலுடன் கமலா கேட்க, வனசா சொல்லுகிறாள்.

"நிலையிற் பிரியேல்"

"அக்கா, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இல்லாள் அன்பு ஆதரவுடன் தன்கையாற் சமைத்து, தானே உணவு பரிமாறிக் கணவன் உண்டபின் தான் உண்ணுங்கொள்கையும், உறங்கும்போது தான் பின்றூங்கி முன்னெழுங்கொள்கையும், கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டியென்ற மேலான வாக்கியத்தைக் கடைப்பிடித்து நடத்தலும் தமிழ்மகளிருக்கிடையே அந்தக் காலத்திலிருந்ததென்றும், இக்காலத்தில் அருகி வருகிறதென்றுஞ் சொல்லுகிறீர்களே; இக்காலத்திற் செல்வக்குடியிற் பிறந்த பெண்களுக்கு, அவர்கள் விவாகமானபின், சமையலுக்கு ஒரு சுயம்பாகி வேணுமாமே; அந்தச் சுயம்பாகியே, கணவனுந் தாமும் ஒருங்கிருந்து அயிரோப்பிய முறையில் ஆகாரம் பண்ணும்போது உணவு பரிமாற வேண்டுமாமே; குழந்தை பிறந்துவிட்டால் அக் குழந்தையை வளர்க்கவும், அதற்குச் செயற்கைப் பாலூட்டவும் ஒரு "ஆயாள்" (செவிலித்தாய்) வேண்டுமாமே; இன்னும் இப்படியான விபரீத செயல்கள் இக்காலத்திலுண்டாமே; அக்கா, இப்படியான விபரீதங்களை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்வதென்றால், பெண்களாகிய நாங்களே எங்களைத் தூற்றுவதாய் முடியுமென்று பயப்படுகிறேன்; இப்படியெல்லாமிருக்க, அக்கா, நீங்கள் தமிழ்மகளிராகிய எங்கள் பழைய கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் இன்னமுங் கைவிடவில்லையே யென்பதையிட்டு உங்களைப் பாராட்டுகிறேன்" என்று பரிவுடன் சொன்னாள்; கேட்ட கமலா புன்முறுவல்பூத்து "தங்காய், தமிழ் மகளிரென்றிருப்போருட் சிலர் இக்காலத்திலே ஆங்கிலமோ தமிழோ அற்பமாகப் பயின்று விட்டு, தம்மை அதிகம் படித்தவர்களாக மதித்துக்கொண்டு சுயசாதியொழுக்கத்தை மறந்து அந்நிய நாகரிகத்தைக் குருட்டுத்தனமாய் அநுசரிக்கத் தலைப்பட்டு, அன்ன நடை நடக்க முயன்ற தன்னடையுங் கெட்ட காக்கைபோல் அந்த நாகரிகமுமில்லாமல், சொந்த நாகரிகமுமில்லாமற் பெரிதும் இடர்ப்படுகிறார்கள்; ஆனால் குலக்குடியிற் பிறந்தோர் தம பழைய மேலான கொள்கைகளை ஒருபோதுங் கைவிடமாட்டார்கள்; கொண்டானே கண்கண்ட தெய்வமெனக் கொண்டாடாத பெண் தமிழ் மகளாகமாட்டாள்; தமிழ் மகளிராகிய நாங்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்களையெல்லாம ஔவைப்பிராட்டியுந் திருவள்ளுவரும் நன்கு விதித்திருக்கிறார்கள்; ஆதலால் "நிலையிற் பிரியேல்" என்றபடி எங்களுக்கு என்ன இடர் நேர்ந்தாலும் எங்கள் மேலான கொள்கையை நாங்கள் ஒருபோதுங் கைவிடவொண்ணாது" என்று சொல்லி முடித்தப் பின்னரும் கமலாட்சி வனசாட்சியை அன்புடன் பார்த்து "தங்காய், உன் மங்கலகருமங் கைகூடும்வரை நான் சும்மாவிருக்கமாட்டேன், முதல் ஆண்டவனருள் வேண்டும், நான் இங்கிருந்தாலும், அங்கே போயிருந்தாலும் உங்கள் விவாகம் விரைவில் நிறைவேறுவதற்காகிய முயற்சி செய்வேன்" என்று ஆதரவுடன் சொல்லி வனசாவிடம் விடைபெற்றுக்கொண்டு அவளை அரிதிற் பிரிந்து மீண்டாள்.

(வரும்)

# ரேடியோ

### * இசைத்தட்டு

**திருச்சி புதன் செப்டெம்பர் 12**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில்செய்தி 7 30 காஞ்சிபுரம் வி விட்டப்பா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்டம் * 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 அலமேலுமங்கான் * 2 தமிழில்செய்தி 2 10 நாட்டியசங்கீதம் * 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு 5 30 டி கே பாலகணேசய்யர் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 இசைச்செல்வம் 7 45 எஸ் பத்மநாதய்யர்பேச்சு 8 இசைநாடகம் 8 15 டி கே பாலகணேசய்யர் புல்லாங்குழல் 8 30 குரல்வகை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஆங்கிலப்பேச்சு 9 30 பாரதிவிழா எட்டயபுரம் அஞ்சல் 10 முடிவு.

**திருச்சி வியாழன் செப் 13**

காலை 7 10 ஆரம்பம்* என் வி வசந்தகோகிலம் 7 15 தமிழில்செய்தி 7 30 ஸ்ரீவாஞ்சியம் கே ராமச்சந்திரன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 காலைஇசை* 8 30 முடிவு

1 சித்ரகானம்* 1 15 பெண்ணுலகம் 1 30 என் கே துரைக்கண்ணு சகோதரர்கள் நாகஸ்வரம் * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 திலீப்குமார்ராய்* 2 தமிழில்செய்தி 2 10 பி ஞானாம்பாள் பாட்டு 2 45 முடிவு

மாலை 5 30 சோட்டுவாத்யம் ஆ இரே வித்வான் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 தலைமேதங்கம் இசை நிகழ்ச்சி 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 நினைகானம் * 8 புதுமலர் பேச்சு 8 15 மாயவரம் வி வி கிருஷ்ணய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 ஸ்ரீவாஞ்சியம் கே ராமச்சந்திரன் பாட்டு 10 முடிவு.

## பெயர் மாற்றம்

நல்லூர் கிழக்கு, கணபதி இராமுப்பிள்ளை யெனவும், வேலுப்பிள்ளையெனவும் இவ்வளவு காலமும் வழங்கப்பட்டு வந்தவனான், இத் தேதி (11 - 9 - 51) தொடக்கம் என் பெயரை கணபதி வேலாயுதபிள்ளையென மாற்றி யிருக்கிறேன் என்பதை இதனாற் சகலருக்குந் தெரிவிக்கின்றேன்; நானும் இன்று தொடக்கம் க வேலாயுதபிள்ளையென்றே எச்சாதனத்திற்கும் கையெழுத்திடுவேன்.

இங்ஙனம்

கணபதி வேலாயுதபிள்ளை.

நல்லூர் கிழக்கு
11—9—51.

M 96 11, 14—9—51.

## "பௌத்த சமயத்திற்கு அரசினருதவி வேண்டாம்"

"பௌத்த சமயிகளாகிய எங்கள் சமயத்திற்கு அரசினர் உதவியும் வேண்டாம; அரசினர் எக்காரணம் பற்றியும் எங்கள் சமய விஷயத்திலே தலையிடவும் வேண்டாம்" என்று உவெலிகம நகரசங்கத் தலைவராகிய திரு A. P. தானுவத்தை யென்பவர் ஒரு கூட்டத்திலே தலைமைவகித்த போது கூறினாராம்.

## மகளிர் மன்றம்

### சிசுபரிபாலனம்

II

சீராட்டும் இடத்தருகில் சுவர்க்காரம் "துவாய்" (ஒற்றுடை) முதலியவற்றை வைத்துக்கொள்ள வேண்டும்.

குளிக்க வார்க்கும்போது நீர்த் தொட்டியினருகில் குழந்தையை மடியின்மீது துணியிட்டு படுக்கவைத்துக்கொண்டு, தான் ஒருபலகையின் மேலிருந்து கொள்ளலாம். முதலிற் கண், மூக்கு, வாய் முதலியவைகளைக் கழுவ வேண்டும்; கண்களிலிருந்து பூளை வெளிப்படுவதாகக் காணப்படுமாயின் உடனே வைத்தியரிடம் சிகிச்சை பெறவேண்டும். பின்னர் தலையைக் கழுவவேண்டும். காதுகளினுள் ஒருதுளி நீராவது சிந்த விடக்கூடாது. தலையைக் கழுவியபின்னர் ஈரமில்லாது நன்றாக உலர்த்திவிட வேண்டும். பின்னர் முகத்தை ஈரச்சீலையாற்றுடைத்து உலர்த்தவேண்டும். அதன் பின்பே உடம்பைக் கழுவவேண்டும். பின்னர் குழந்தையைத் தூக்கி மடியில வைத்துக்கொண்டு நன்றாக ஈரம் துடைத்தல்வேண்டும்; தோல்மடிப்புவிழும் இடங்களை அவதானித்து அதுவெவ்விடத்திலாயினுஞ் சிவந்து காணப்படின் அவ்விடத்தில எண்ணெயிட்டுத் தேய்த்துவிடலாம். பின்னர் உடைகளை அணிந்துவிட வேண்டும். நெஞ்சிலும் வயிற்றிலும் குளிரேறவிடாது தடுத்தல் அவசியம் இக்காட்டுத் தாயர் சிலவேளைகளில் அகிற்புகை அல்லது சாம்பிராணிப் புகை கொண்டு தலையை உலரச்செய்வர்.

குழந்தையை ஒவ்வொரு நாளுங் குளிக்கவார்க்க அதன் தேகநிலை இடங்கொடாவிட்டால் ஈரச் சீலையால் உடலைத்துடைத்து அழுக்கை நீக்கிவிடலாம, ஈரச்சீலையாற்றுடைக்கும்பொழுதும் முதலில் முகத்தைத் துடைக்கவேண்டும பின்னர் கைகள் நெஞ்சு வயிறு முதலியவற்றையும், கடைசியாகக் கால்களையுந் துடைத்துவிடலாம். துடைத்து முடிந்தவுடனே ஈரமுலர்த்திவிடல் வேண்டும். குழந்தை வளர்ந்தபின் தாயின் கால்களில் அதனையிருத்திக் குளிக்க வார்க்கலாம். குழந்தை வளர்ந்த பின் தானே பற்களைத் துலக்கவும் முகங் கழுவவுங் குளிக்கவுஞ் சிறிது சிறிதாகச்செய்யப் பழக்கவேண்டும.

உடை :— குழந்தையின் உடைமெலியதாகவும் தளர்ச்சியுள்ளதாகவும், இலகுவில் அணியத்தக்கதாகவும் இருக்கவேண்டும். குழந்தை விரைவில் வளருகிறபடியால் இறுக்கமான உடைகள் அணியக்கூடாது தேச சுவாத்தியத்திற்கும் அவ்வப் பருவங்களுக்கும் ஏற்ற உடைகளையே அணிதல்வேண்டும். உடம்பு முழுவதிலும் ஒரேயளவு சூடு இருக்கத்தக்கதாக உடையணிய வேண்டும்.

குழந்தை பிறக்கு முன்னரே அதற்கு வேண்டிய உடைகளை ஆயத்தஞ் செய்து வைத்துக்கொள்ள வேண்டும. குழந்தை பிறந்தபின் அதைக் கழுவிவிட்டு வயிற்றின் அடிப் பாகத்தைச் சூடாக வைத்திருத்தற்பொருட்டுச் சீலையால் நன்றாகச் சுற்றி வைத்திருத்தல் வேண்டும். இதற்கு மேல் தளர்ச்சியான ஒரு சட்டை இடலாம். உடம்பிற் குளிரோ தூசோ, தொற்று நோய்களோ பிடிக்காதபடி அவதானமாகக் குழந்தைக்கு உடைகளை உடுத்தல் வேண்டும. இறுக்கமான உடைகளை ஒருபோதும் அணியக்கூடாது. குழந்தைவளர்ந்தபின் தளர்ச்சியான சட்டையை அணியலாம். 'மல்' துணியிற் சட்டை தைத்தல் நலம். சிறுசப்பாத்து அல்லது காலுறைகளை அணியலாம். இவை கால்களிற் குளிரேறுவண்ணம காப்பாற்றும். குளிர் காட்களில ஒரு தொப்பியுமிடலாம். குழந்தையைப் படுக்க வைக்க முன்னர்க் காலையில் உடுத்திய உடைகளை மாற்றி அணியவேண்டும்.

**குழந்தையைநிறுத்தல்:—** குழந்தை பிறந்தவுடன் சாதாரணமாக ஆறு தொடக்கம் எட்டு இறாத்தல்வரை நிறையுள்ளதாகவிருக்கும். பிறந்த சில நாட்களில் நாளொன்றுக்கு 4 அவுன்ஸ் வீதம் நிறை குறைந்துவிடும். பின்னர் நிறைகூடத்தொடங்கும். பிறந்த ஒரு கிழமைக்கு, பிறந்தவுடன் இருந்த நிறையுடையதாகவேயிருக்கும் ஐந்து மாதங்களின் பின்னர், பிறந்தபொழுதைக் காட்டிலும் இருமடங்கு நிறையுள்ளதாக இருக்கவேண்டும். தேகாரோக்கியமுள்ள குழந்தைகள் கிழமைக்கு 5 அவுன்ஸ் வீதம் நிறையிற்கூடும். அப்படி நிறையிற் கூடாவிட்டாற் குழந்தையின் உணவிற் குறைகாணப்படலாம். அது அசுத்தமான காற்றைச் சுவாசிக்கின்றதாகலாம். இவையிரண்டுமில்லாவிட்டால் குழந்தையுடலில் ஏதோ நோய் இருக்கவேண்டும். இப்படிக் குறைபாடுகள் காணப்பட்டால் உடனே சிறந்த வைத்தியரிடம் குழந்தையைக்காட்ட வேண்டும்.

பிறக்கும்பொழுது குழந்தை பெரும்பாலும் 19 அங்குலநீளமுள்ளதாகக் காணப்படும். முதல் ஆறு மாதத்தி[illegible] 4 அல்லது 5 அங்குலம் வளருகிறது. மற்றை ஆறு மாதத்திலும் 3 அல்லது 4 அங்குலம் வளரும். தாய்மார் குழந்தைகளின் வளர்ச்சியை அவதானித்து அதற்கேற்ப நடத்தல வேண்டும.

## அகில இலங்கைச் சைவ சமயிகள் மகாநாட்டம்

சென்ற சனிக்கிழமை (8-9-51) யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில், பகல் 3 மணிவரையில், சைவப் பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரமவர்கள் தலைமையில், இந்து ஆலய விசாரணைச் சங்கத்தாரின் அறிக்கையை எதிர்க்குமுறையில், அதற்கு மாறான கொள்கையுடையார் பல்லோரைக் கொண்ட ஒரு மகாகூட்டம் நடைபெற்றது. அச் சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் முதலாம் பல பிராமணர்களும் சைவத்தேசிகர்களும் பிரதானஸ்தானம் வகித்திருந்தனர். அச் சமயத்தில் ஆங்குவருதல் இடமாகாளாகிய இலங்கைப் பிரதமர், நீதிப்பகுதிமந்திரி, திரு. S W.R D. பண்டாரநாயக உணவுப்பகுதி மந்திரி, பாராளுமன்றத்தலைவர், யாழ்ப்பாணம் நகரசங்கத்தலைவர் முதலானோர் மேற்படி மகாநாட்டை வாழ்த்தித் தந்திச் செய்தியனுப்பியிருந்தனர்; மகாகூட்டத்தலைவர் தமது முன்னுரைபேசியபின், திரு V. வீரசிங்கம் B. A; J. P, வழக்கறிஞர் திரு. S. பதஞ்சலி M. B E, புலோலிச் சைவாங்கில வித்தியாசாலை அதிபர் திரு வே. அருணாசலம் B.A; திரு. S. K. செல்லையா, வழக்கறிஞர் திரு. V. S. கார்த்திகேசு, திரு. இரகுநாதன், புகைத்திரம் M. கிருஷ்ணர், திரு. R. சிவகுரு முதலானோர் பேசினார்கள்; சில பிரதான நிர்ணயங்கள மேற்படி மகாகூட்டத்தில நிறைவேற்றப்பட்டன; இலங்கைப் பிரதமரையும் உள்நாட்டு மந்திரியையும் நேரிற்சந்தித்துத் தங் கொள்கையை அவர்களுக்குத் தெருட்டி ஆவன்வண்டின செய்யும்படி திருவாளர்கள் சு. சிவபாதசுந்தரம், V. S. கார்த்திகேசு, V. வீரசிங்கம், S. பதஞ்சலி, A. தியாகராஜா என ஐவர் தேர்ந்து நியமிக்கப்பெற்றனர்.

யாழ்ப்பாணம்

## ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைகள்

—

பாடவிதானம் 1952—1954

தமிழ்

பிரவேச பரீட்சை :

க, பாடவகை I : இலக்கியம்.

1. நாலடியார் அறத்துப்பால் 2. நளவெண்பா சுயம்வர காண்டம் 3. வில்லிபுத்தூராழ்வார்பாரதம் - கிருஷ்ணன் தூதுச்சருக்கம் 4. இருது சங்கார காவியம் (முகாந்திரம் தி. சதாசிவஐயர்) 5. நான்காம் பாலபாடம் : வசனபாகம் மட்டும் (ஆறுமுகநாவலர்) 6. சங்கநூற்கட்டுரைகள் [முதற்பாகம்] (இளவழகனார்)

உ, பாடவகை II : இலக்கணம்

1. நன்னூற் காண்டிகையுரை (நாவலர் பதிப்பு) 2. யாப்பிலக்கண வினாவிடை (விசாகப் பெருமாளையர்) 3. அணியிலக்கணவினாவிடை (விசாகப்பெருமாளையர்)

ந, பாடவகை III : கட்டுரை

இவ்வினாப்பத்திரம் கட்டுரை எழுதுதல், கருத்துரைகூறல், சாரம் கூறல், நயந்தல் என்பவற்றிற் பரீட்சார்த்திக்குள்ள அறிவைப் பரீட்சிப்பதாயிருக்கும். பரீட்சார்த்திகள் ஒரு மணித்தியாலத்திற்குக் குறையாத நேரத்தைக் கட்டுரையெழுதுவதிற் செலவிடவேண்டும்.

ச. பாடவகை VI : (அ) பிரிவிலிருந்து ஒரு பாடமும், (ஆ) பிரிவிலிருந்து ஒரு பாடமும எடுக்கவேண்டும்.

(அ) 1. சமஸ்கிருதம் 2. ஆங்கிலம் 3. சிங்களம்

(ஆ) 1. எண்கணிதம் 2 சரித்திரம் 3. பூமிசாஸ்திரம் 4. குடியியல் 5. பொருளாதாரம் 6. சங்கீதம் 7. சமயம் 8. செய்யுளியற்றல் : வெண்பாவும், ஆசிரியப்பாவும்.

இப்பாடங்கட்குரிய வினாப்பத்திரங்கள், அரசினர் சிரேட்டபாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை (தமிழ்) பாடவிதானத்திற் கூறப்பட்டுள்ள பகுதிகளைக் கொண்டனவாக விருக்கும்.

---

கடிதம்.

அகில இலங்கை

## வேதாரணிய சைவக் குருமார் சங்கம்

——

நிகழும் ஆவணி மாதம் 16ம் நாள் (1-9-51) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் பண்ணாகம் மெய்கண்டான்பாடசாலை மண்டபத்தில் ஷெ சங்கத்தலைவர் திரு T.R N. அருணாசலக்குருக்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது. அத்தருணம் சைவமக்களும சைவக்குருமாரும் சமுகமளித்தனர். தலைவர் தமது முன்னுரையில் சங்கத்தின் நோக்கங்கள்பற்றியும் சைவ சமயத்தின் தனிச் சிறப்புக்கள்பற்றியும் இலங்கை அரசினர் ஏற்படுத்தியுள்ள குடியேற்ற வெளியேற்றச் சட்டத்தால் குருமாரும் பாதிக்கப்பட்டிருப்பதால் அதற்கு வேண்டிய நிவாரணங்களை இலங்கையிலுள்ள சைவமக்கள் ஒருங்குகூடிச் செய்யவேண்டும் என்னும் கருத்துப்பட விரிவாகப் பேசியுள்ளார். இரண்டாவதாக முதலியார் திரு. செ. சின்னத்தம்பி "குருவும் சிஷ்யவர்க்கமும்" என்னும் விஷயம்பற்றியும், ஆலயபரிபாலன முறையால் குருபரம்பரையைச் சிறந்த முறையில் வைக்கலாமென்னும் விரிவாகச் சொற்பொழிவாற்றினர். ஈற்றில், "பரம்பரைபரம்பரையாக வேதாரணியத்திலிருந்து இங்கு வந்து குருததொழில் புரிந்துவரும் குருமார் யாவருக்கும் அவர்கள் தம் சொந்த நாட்டிற்குச் சென்று திரும்பிவருவதற்குத் தடைசெய்யாது போதியவசதிகள்செய்து கொடுத்து இலங்கைச் சைவர்களின் சமயநெறி வளர்தற்கு அரசாங்கம் அதிகஉதவிபுரியவேண்டுமென்று இம் மகாசபை இப்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரையும் ஏனைய பிரதிநிதிகளையும் கேட்டுக்கொள்ளுகிறது" என்னும் பிரேரணை சபையாரால் எடுத்தாளப்பட்டு ஏகமனதாக அங்கீகரிக்கப்பெற்றது.

R. கல்யாணசுந்தரக்குருக்கள்

3-9-51. அழிபுரம்.

---

### நமது கலை நிலையம்

**வேதாகமநிருபணம் (இரண்டாம்பாகம்)**

இது யாழ்ப்பாணம் வேதாகம சைவசித்தாந்த சபைத் தலைவராகிய (அச்சுவேலி) சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களவரால் எழுதி சைவாபிமானிகள் பொருளுதவி கொண்டு, காரைவாய்ச் சைவ ஆராய்ச்சிச் சங்கத்தாரால் அச்சிடுவித்து வெளியிடப்பெற்ற சிறந்த வெளியீடாகும். வேதாகம நிருபண முதற்பகுதி இற்றைக்குச் சில மாசங்கட்குமுன் வெளிவந்துள்ளது; அதன் தொடர்பே இந்த இரண்டாம் பாகமாகும்; இதன்கண் வேதாகமங்கள் வடமொழியிலுள்ளன, ஆகம அறிவு வேண்டாமா? மறையெனும் நூல்கள், தேவார திருவாசகங்களை தமிழ்மறைகள் என்பன முதலாம் அரும்பெரும் விஷயங்கள் பல, தக்க ஆதாரத்தோடு நுண்ணிய முறையில் எழுதப்பட்டுள்ளன; விபரீத கொள்கையுடையார் கூற்றுக்கள் சுருக்கரீதியாகவும் பிரமாண சகிதமாகவும் மறுக்கப்பட்டுள்ளன. இப்படியான நூல்களைக் காய்தலுவத்தலகற்றி ஆராயப்புகின் உண்மை நன்மையிரண்டும் புலப்படும்; இக்காலத்தில் இதுபோன்ற வெளியீடுகள் சைவமக்களுக்கு இன்றியமையாதனவாம்; இதன்கணுள்ள "வேதம் எழுதாமறை" என்னும் விஷயம் இறைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**முத்துமாரியம்மை பதிகம்**

இது தீவுப்பகுதியைச் சேர்ந்த வேலணையிற்கோயில்கொண்டருளிய பெருங்குளத்து மாரியம்மைமீது திரு. க. சோமசுந்தரப் புலவர் முதலிய சில அறிஞரால் பாடப்பெற்ற தோத்திரப் பிரபந்தமாகும். இதனை அச்சிடுவித்து வெளியிட்டவர் திரு. பொ. ஜகந்நாத உபாத்தியாயர்.

இவ் வெளியீடுகளை எமது பார்வைக்குதவிய ஆசிரியர்கட்கு நன்றி கூறுகின்றோம்.

---

## இந்துமத நோயாளருக்குப் பிரார்த்தனை மண்டபம்

——

காங்கேசன்துறை கயரோக வைத்தியசாலையில் இந்து மக்களின் பிரார்த்தனைக் கூட்டம் 2-9-51 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமானது. ஆத்ம ஜோதிப் பத்திராதிபர் திரு K. இராமச்சந்திரன், முருக நாமத்தைப் பத்தியோடு தினம் சொல்வதால் முருகன் பெருமையை உணரலாம் எனவும், ஆண்டவனின் அருட் சக்தியை நோயாளரின் சேவையில் காணலாம் எனவும் கூறினர். பின் இந்துமத நோயாளரின் வழிபாட்டிற்காக ஓர் பிரார்த்தனை மண்டபம் கட்டவேண்டுமென்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

— கடித

---


வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

### திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2

### சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்திவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்திற்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25.00 அரைறுத்தல் விலை ரூபாய் 12-50

கால்றுத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி; மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

**சிவஞான பற்பொடி**

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

எமது சோல் ஏசன்றுகள்

1 மோகன் அன் கொம்பனி, No. 66 முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு

2 நவலெட்சுமி புத்தகசாலை, செட்டியார் தெரு, கொழும்பு

எமதுவிலாசம்

K. ஆறுமுகம்பிள்ளை

நி $\frac{3}{1}$ தட்டாதெரு

கோட்டைமுனை, மட்டக்களப்பு

M 92

இலங்கையின் மிகப் பெரிய

— நகை —

வியாபாரிகள்

= O =

தந்தி: "JEWELLERS"

போன்: 161.

கிளைத்தானம்:

63, கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.

L. K. S. LEBBAY BROS GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ். லெப்பை பிரதஸ் தங்கமாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarpannai; Jaffna, on Tuesday September 11, 1951